MCOP.No. 8/2020 நாள் 23.04.2025 PW 1 – திரு. R.வீரப்பன்

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை (2ம்எதிர்மனுதாரர்தரப்பில்)

இந்த விபத்து சம்பந்தமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது நான் தான் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் காணப்படும் சரத்துகள் என்னை பொறுத்த வரை உண்மை தான் என்றால் அந்த நேரத்தில் பதட்டத்தில் என்ன சொன்னேன் என்று எனக்கு சரியாக தெரியவில்லை. போலீசார் சரியாக விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. அதற்கு பின்பு என்னிடம் எதுவுமே கேட்கவில்லை. விசாரணை சரியாக செய்யப்படவில்லை என்று நான் நடவடிக்கை எதுவும் எடுத்துள்ளேனா என்றால் இல்லை. நானும் எனது தந்தையும் ரோட்டை கடக்கும் போது தான் விபத்து ஏற்பட்டது என்று கூறிவிட்டு தற்போது நின்று கொண்டிருக்கும் போது விபத்து ஏற்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொல்வது சரியல்ல. எனக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள் என்றால் 2 பேர். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் 1 மகன் MBA படிக்கிறார் மற்றொருவர் CA படிக்கிறார். வங்கியில் உண்மையான ஆவணங்கள் சமர்ப்பித்து தான் கணக்கு தொடங்கினோமா என்றால் உண்மையான ஆவணங்கள் தான் சமர்ப்பித்தோம். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.1 மற்றும் 4 ஆவணங்களை பார்த்தாலே விபத்து நான் சொல்வது போல் நடக்கவில்லை என்று தெரியவரும் என்றால் சரியல்ல. நானும் எனது தந்தையும் எதிர்பாராத விதமாக திடீரென்று ரோட்டை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு தற்போது என்ன வயது என்றால் 60. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.12 வங்கி கணக்கு புத்தகத்தின் அடிப்படையில் எனக்கு தற்போது வயது 80 என்றால் சரியல்ல. வழக்கிற்காக எனது வயதை 60 என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு விபத்து சமயத்தில் 65 வயது என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு தற்போது 80 வயதாகும் நிலையில் விபத்து சமயத்தில் எனது தகப்பனாருக்கு 65 வயதாக வாய்பில்லை என்றால் சரியல்ல. நானும் மற்ற மனுதாரர்களும் என் தகப்பனாரின் வருமானத்தை சார்ந்திருந்ததாக சொல்வதும் நம்பும் விதமாக இல்லை என்றாலும் உண்மை இல்லை என்றாலும் சரியல்ல. என் தகப்பனார் மாதம் ரூ. 15,000/– வருமானம் ஈட்டி வந்ததாக சொல்வதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்வதில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் கம்பெனியில் வேலை பார்த்து மாதம் ரூ. 15,000/– ஈட்டி வந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. மனு 1ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதார் 1ம் எதிர்மனுதாரரின் indemnifier என்ற நிலையில் தான் கட்சியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். 1ம் மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி

செய்துள்ள நிலையில் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்தும் மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. 2010 ல் ஏற்பட்ட விபத்திற்கு 2020 ல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதன் மூலம் நாங்கள் என் தகப்பனாரை சார்ந்து இருக்கவில்லை என்பது தெரியவரும் என்றால் சரியல்ல. என் சகோதரிகளுக்கு திருமணம் செய்து கொடுத்து அவர்கள் தனியாக வசித்து வருகிறார்கள் என்றால் என் தகப்பனார் இறந்த சமயத்தில் சகோதரிக்கு திருமணம் ஆகவில்லை தற்போது ஒரு 10 வருடத்திற்கு முன்பு திருமணம் ஆனது. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் நான் கோரியுள்ள இழப்பீடு அதிகப்படியானது என்றால் சரியல்ல. இறுதி சடங்கிற்காக நான் மிகையாக ரூ.2,50,000/- கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. மருத்து செலவுகளை காட்டக்கூடிய பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்றால் சரியல்ல.